செய்தி வெளியீடு எண்:178 நாள் :24.04.2015

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின்** வழிகாட்டுதலின்படி மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் **திருமதி எஸ். கோகுல இந்திரா,** அவர்கள் தலைமையில் கூட்டுறவு நூற்பாலைகளின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் 24.04.2015 அன்று சென்னையிலுள்ள கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரகக் கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழகத்தில் இயங்கிவரும் ஐந்து கூட்டுறவு நூற்பாலைகளில் செயல்படுத்தப்பட்டு வரும் நவீனப்படுத்தும் திட்டம் தொடர்பான முன்னேற்றம் குறித்து ஆலை வாரியாக ஆய்வு செய்யப்பட்டது. இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலையினைரூ.28.02 கோடி மதிப்பில் நவீனப்படுத்தப்பட்டு 04.03.2015 அன்று முதல் சோதனை ஒட்டம் துவக்கப்பட்ட ஆலையின் செயல்பாடுகள் குறித்தும் அண்ணா, பாரதி, கன்னியாகுமரி, புதுக்கோட்டை மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய ஆலைகள் ரூ.147.21 கோடி மதிப்பில் நவீனப்படுத்தும் பணியில் முதற்கட்டம் நிறைவு பெற்று இரண்டாம் கட்ட பணிகள் நடைபெற்று வருவதையும் அமைச்சர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டது. மேலும் நூற்பாலைகளில் அனைத்து பணிகளும் முழு வீச்சில் முடிக்கப்பட்டு அரசின் திட்டங்களான விலையில்லா வேட்டி சேலை திட்டம் மற்றும் விலையில்லா சீருடை திட்ட துணி உற்பத்திக்கு தேவையான நூல் இரகங்களை தங்கு தடையின்றி விநியோகம் செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறையின் அரசு முதன்மைச் செயலாளர் **திரு ஹர்மந்தர்சிங், இ.ஆ.ப.,** கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குநர் திரு தி.ந. வெங்கடேஷ், இ.ஆ.ப., கூடுதல் இயக்குநர், திரு க. கர்ணன், இணை இயக்குநர் (துணிநூல்) திரு எஸ். நாகராஜ் மற்றும் கூட்டுறவு நூற்பாலைகளின் நிர்வாக இயக்குநர்கள் உள்ளிட்ட துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**